அபிவிருத்தி மற்றும் முன்னேற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவின் இயந்திரங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயந்திரவியல் பிரிவு இயந்திரவியல் அதிகாரி ஒருவரின் மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றது.

2017.01.01 ஆந் திகதி எமது திணைக்களத்திற்குச் சொந்தமாகவிருந்த இயந்திரங்கள் தொடர்பான விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும

ஜப்பான் இயந்திரங்கள்

01. எக்ஸ்கேவேட்டர் இயந்திரம்	04
02. மினி எக்ஸ்கேவேட்டர் இயந்திரம்	02
03. டோசர் இயந்திரம்	14
04. சிறிய மண் அடிக்கும் ரோலர்	02
மொத்தம்	**22**

சீன இயந்திரங்கள்

01. எக்ஸ்கேவேட்டர் இயந்திரம்	07
02. வீல் லோடர்	03
03. பெக்கோ லோடர்	05
04. புல்டோசர்	09
05. வைபிறேட்டர் றோலர்	04
06. மோட்டர் கிறேடர் இயந்திரம்	01
மொத்தம்	29
மொத்தக் கூட்டுத்தொகை	**51**

ஜப்பான் உதவியின் கீழ் வழங்கப்பட்ட இயந்திரங்களில் செயலிழந்துள்ள இயந்திரங்கள் 05 (DAS 26, DAS 27, DAS 28, DAS 34, DAS 45) பாவனையிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய திணைக்களத்திற்குச் சொந்தமாக செயற்படும் நிலையிலுள்ள மொத்த இயந்திரங்களின் எண்ணிக்கை 46 ஆகும்.

இவ் இயந்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிராந்திய இயந்திரவியல் பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ளது.

தொ.இல.	நிலையம்	சீன இயந்திரம்	ஜப்பான் இயந்திரம்	மொத்தம்
01.	மாலபே	01	02	03
02	மாஹோ	09	06	15
03	அம்பாந்தோட்டை	04	04	08
04	மொனறாகலை	01	04	05
05	அனுராதபுரம்	14	01	15
	மொத்தம்	**29**	**17**	**46**

2.8.2 வருமான விபரம் - 2017

இவ் இயந்திரங்களின் மூலம் 2017 ஆம் வருடத்தின் பொருட்டு திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள வருமானம் ரூபா 10,369,745.00 ஆகும்.

01. அம்பாந்தோட்டை - ரூபா 3,170,310.00
02. மொனறாகலை - ரூபா 576,815.00
03. அனுராதபுரம் - ரூபா 2,484,635.00
04. குருநாகலை - ரூபா 4, 055,985.00
05. கொழும்பு - ரூபா 82,000.00

இவ் இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டு செயற்பட்டுள்ள சேவைகள் மீற்றர் மணித்தியாலம் 4500 அளவில் செயற்பட்டுள்ளது. இதற்கமைய நிறைவேற்றியுள்ள வேலைகளின் பெறுமதி அண்ணளவில் 27 மி.ரூபாயாகும். (சேவைகள் மணித்தியாலயங்களின் பெறுமதி ரூபா 6000.00 என உரிய கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது.)

2.9 கமக்காரர்களின் பொறுப்பு நிதியம்

2.9.1 விவசாய வீதிகள்

அம்பாறை மாவட்டத்தில் 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் 02 கருத்திட்டங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,999,500.00 ஆகும். இதில் தற்போது ரூபா 3,696,615.69 பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு கருத்திட்டத்தின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு 02).

அனுராதபுர மாவட்டத்தில் 2017 ஆம் ஆண்டு ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 04 கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அனுமதிக்கப்பட்ட மொத்த மதிப்பீட்டுப் பணம் ரூபா 5,650,000.00 என்பதுடன், தற்போது செலுத்தப்பட்டுள்ள பணம் ரூபா 1,917,995.87 ஆகும். இவற்றில் ஒரு கருத்திட்டத்தின் வேலைகள் மட்டும் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், ஏனைய இரு வேலைகளின் முன்னேற்றம் 70% ஆகும். (இணைப்பு **03)**

மாத்தறை மாவட்டத்தில் 12 மி.ரூபா ஒதுக்கீட்டின் கீழ் 12 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன். அவற்றின் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 14,160,000.00 ஆகும். அவற்றின் மொத்தச் செலவு ரூபா 11,974,173.33 ஆகும். (இணைப்பு 06)

2.9.2 சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பு

அனுராதபுர மாவட்டத்தில் முதலாவது கட்டமாக 2016 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட இரு குளங்களின் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஒப்பந்தமிடப்பட்ட பெறுமதி ரூபா 3,612,503.92 ஆகும். பௌதீக முன்னேற்றம் 100% என்பதுடன், பெற்றக் கொண்ட முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 04 கருத்திட்டங்கள் உள்ளதுடன், அதன் ஒப்பந்தமிடப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 17,274,088.93 ஆகும். அவற்றில் ஒரு கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 100% என்பதுடன். மற்றைய கருத்திட்டம் செயற்படும் நிலையில் உள்ளது. ரூபா 5,301,000.00 முற்பணமாக செலுத்தப்பட்டுள்ளது. **(இணைப்பு 04)**

மாத்தறை மாவட்டத்தில் விசேட கருத்திட்டமாக சிறிய நீர்ப்பாசன புனரமைப்பின் கீழ் 03 கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் மொத்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,035,000.00 ஆகும். மொத்தச்செலவு ரூபா 4,348050.37 ஆகும். இவற்றின் நிதி முன்னேற்றம் 100% என்பதுடன். 03 வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாத்தறை மாவட்டத்தில் 2015 ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 3,439,527.00 ஆகும். 2016.08.31 ஆந் திகதியில் வேலையின் செலவு ரூபா 3,244,534.80 ஆகும். இதன் வேலைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், தெவிநுவர பிரிவினுள் 04 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு ரூபா 3,489,382.58 என்பதுடன், அதன் செலவு ரூபா 3,361,155.85 ஆகும். இவற்றின் வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளது. **(இணைப்பு 5-1,5-2,5-3)**

மாத்தறை மாவட்டத்தில் 19 மி.ரூபா ஒதுக்கீட்டின் கீழ் 34 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், அவற்றின் மதிப்பீடுகளின் மொத்தப் பெறுமதி ரூபா 23,176,000.00 என்பதுடன், மொத்தச் செலவு ரூபா 17,996,711.68 ஆகும். சகல இச் சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளது. **(இணைப்பு 07)**

2.9.3 பசளைக் களஞ்சிய நிர்மாணம்

2017 ஆண்டு கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்திற்கு வேண்டுகோள்கள் கிடைக்கப் பெற்றிருப்பினும், ஒதுக்கீடு வழங்கப்படவில்லை. கமக்காரர்களுக்குப் பசளைக்குப் பதிலாக பணம் வழங்கியதன் காரணத்தால் இவ்வருடம் பசளைக் களஞ்சிய நிர்மாணங்கள் இடம்பெறவில்லை.

2.10 கமநல அபிவிருத்தி நிதியம்

கமநல அபிவிருத்தி நிதியத்தினால் கமநல சேவைகள் நிலையங்களினது வழங்கல்களை அதிகரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தலின் கீழ் விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 4.00 மி.ரூபா ஒதுக்கப்பட்டதுடன். அவற்றில் ரூபா 6,540,764.90 பணம் வழங்கப்பட்டது. இதில் 06 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் 07 நிலையங்களின் வேலைகளின் பொருட்டு முற்பணம் வழங்கப்பட்டதுடன், அவற்றின் மொத்தச் செலவு ரூபா 3,160,118.10 ஆகும். (அபிவிருத்தி நிதியத்தின் மூலம் சேவைகள் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீட்டில் 04 மி.ரூபா பெற்றுக் கொள்ள நேரிட்டது.

அதற்கான காரணம் 2016 ஆண்டு முற்பணத்தை இவ்வருடம் செலுத்துவதற்காகும்) சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளது. **(இணைப்பு 08)**

கட்டடங்கள், வாகனங்கள் மற்றும் உபகரணங்களைப் பராமரித்தல் மற்றும் திருத்தம் செய்தலின் பொருட்டு 10.00 மி.ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் ரூபா 9,673,927.98 வழங்கப்பட்டுள்ளதுடன், விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள்களுக்கமைய (2016 வருடத்தின் முற்பணம் செலுத்துவது இவ்வருடத்தின் முற்பணம் செலுத்துவது இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டதால், இம்முற்பணத்தைச் செலுத்துவது இவ்வருடத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தில் செலுத்தப்பட்டது.) அப்பணம் போதுமானதாக இருக்கவில்லை. அபிவிருத்தி நிதியத்தினால் சேவைகள் பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தில் அவர்களினால் செலவுகளை மேற்கொண்டு மிகுதியாகவிருந்த பணம் உட்பட 13 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 19 வேலைகளின் பொருட்டு முற்பணமாக வழங்கப்பட்டதுடன், அதன் மொத்தச் செலவு ரூபா 10,098,445.87ஆகும். களுத்துறை தவிர்ந்த ஏனைய சகல வேலைகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளது. **(இணைப்பு 09)**

2.11 காணிகளின் சுவீகரிப்பு

2017 ஆம் வருடத்திலும் திணைக்களத்திற்கு கையளிக்கப்படாதிருந்த கமநல சேவைகள் நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களின் புனரமைப்பின் பொருட்டு தேவையான காணிகளை கையேற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னைய வருடங்களின் போன்று மேற்கொள்ளப்பட்டது. காணிகளை கையேற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டின் பொருட்டு நீண்ட காலம் செல்லல் மற்றும் அடிக்கடி எதிர்ப்புக்கள் எழுதல் போன்ற காரணங்களால் இச்செயற்பாடு தொடர்ச்சியாக நடைபெற்ற வண்ணம் உள்ளது.

2.12 புத்தரிசி விழா

அனுராதபுரம் ஜயஸ்ரீ மஹா போதியில் 50 வது தடவையாகவும் தேசிய புத்தரிசி விழா ஏப்பிறல் மாதம் 07 மற்றும் 08 ஆந் திகதிகளில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. இலங்கை வாழ் கமக்காரர்களின் அபிவிருத்தியின் எதிர்பார்ப்புடன் "வானம் பொழியட்டும் - வயல் நிலங்கள் சிறக்கட்டும்" என்னும் தொனிப் பொருளின் கீழ் கௌரவ விவசாய அமைச்சரின் வழிகாட்டல் மற்றும் விவசாய அமைச்சின் செயலாளரின் அறிவுரைகள் 2017 புத்தரிசி விழாவினை சிறப்புறச் செய்வதற்கு ஏதுவாகவிருந்தது. இத்தேசிய விழா இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் ஊடாக நேரடியாக ஒளிபரப்பு செய்வதற்கு முன்னைய வருடங்களின் போன்று இம்முறையை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களிலிருந்தும் சேகரிக்கப்பட்டு கையளிக்கப்பட்ட புத்தரிசி அன்றைய தினம் பூஜை செய்யப்பட்டதுடன், இதன் பொருட்டான அரிசி மற்றும் நிதி உதவிகள் நாட்டில் சகல பாகங்களிலும் அமைந்துள்ள கமக்காரர் அமைப்புக்களினால் செய்யப்பட்டது. இம்முறைப் புத்தரிசி விழாவை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு விவசாய அமைச்சும் மற்றும் அதன் கீழுள்ள சகல நிறுவனங்களும், பல அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட வடமத்திய மாகாண சபை, அனுராதபுரம் மாவட்ட செயலகம் மற்றும் தனியார் நிறுவனங்களும் பாரியளவில் பங்களிப்பினை வழங்கியது. இதன் போது புத்தரிசி விழாவிற்கான நினைவு மலரொன்றும் வெளியிடப்பட்டது

இதன் பொருட்டு செலவுத் தலைப்பு 281-2-2-0-1409 கீழ் 02 மி.ரூபா பணம் அனுராதபுரம் மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கப்பட்டதுடன், இப் பணத்தில் ரூபா 1,907,547.23 செலவிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக கமக்காரர்களின் பொறுப்பு நிதியத்தின் கீழ் 3**.00** ரூபா வழங்கப்பட்டதுடன், ஊடக நடவடிக்கைகளின் பொருட்டு ரூபா 2,990,726.80 செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் 281-2-2-0-1409 என்னும் செலவுத் தலைப்பின் கீழ் பிரதான காரியாலயத்தினால் ரூபா 1,040,023.80 செலவிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2017 தேசிய புத்தரிசி விழாவின் பொருட்டான மொத்த செலவு ரூபா 5,938,297.83 ஆகும்.

03. பொறியியல் பிரிவு

3.1 பணிகள் :

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சிறு நீர்ப்பாசனங்கள், கட்டடங்கள், கமநல சேவைகள் நிலையங்கள், மாவட்ட அலுவலக நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள் தொடர்பான மதிப்பீடுகளுக்கு அங்கீகாரம் வழங்குதல், பெறுகை சபைக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு தொழில்நுட்ப அறிக்கையைத் தயாரித்தல் இப்பிரிவினால் அடிப்படையாக மேற்கொள்ளப்படும் பணிகள் என்பதுடன், வெளி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் சுற்றாடல் தொழில்நுட்ப மதிப்பீடு தொடர்பான வெளிக்கள பரிசோதனைகள் மற்றும் குறித்த அறிக்கைகளைத் தயாரித்தலும் மேற்கொள்ளப்படும். விசேடமாக இப்பிரிவின் கடமைகள் அபிவிருத்திப் பிரிவின் செயற்படு திட்டத்திற்கமைய செயற்படுத்தப்படும்.

3.2 2017 வருடத்தினுள் பிரதான காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

- திணைக்களத்தின் 60 வது வருட நிறைவின் பொருட்டு பிரதான காரியாலயத்தின் கட்டடத்தை வர்ணம் பூசுதல் மற்றும் ஏனைய திருத்த வேலைகளை மேற்கொள்ளல்.
- பிரதான காரியாலயத்தின் பொருட்டு புதிய பெயர்ப்பலகையைத் தயாரித்தல்.
- பிரதான காரியாலயத்தின் பொருட்டு நீர்த்தாங்கியைப் புதுப்பித்தல்.
- பிரதான காரியாலயத்தின் வெளிப்புற கால்வாய் அமைப்பைத் திருத்தம் செய்தல்.
- 70MA தொடக்கம் 400MA வரையிலான மின்சாரக் கொள்ளளவை அதிகரித்து பிரதான காரியாலயத்தின் மின்சார அமைப்பினை புதுப்பித்தல்.

04. நிறுவன அபிவிருத்திப் பிரிவு

நோக்கம் மற்றும் பொறுப்புக்கள்

கமக்காரர்களின் கமத்தொழில் தேவைகளை நிவர்த்தி செய்வதன் மூலம் அவர்களது பொருளாதார மற்றும் சமூக பிண்ணனியை பலப்படுத்துவதை நோக்காகக் கொண்டு மத்தியஸ்தரின் வகிபங்கை நிறைவேற்றுப் பொருட்டு சகல கமநல சேவைகள் நிலையத் தளங்களை இயக்குவித்தலின் பொருட்டு 2017 ஆம் வருடத்தினுள் இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கடமைப் பொறுப்புக்கள் பற்றி ஒவ்வொரு விடயங்களின் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வரிசைப்படுத்துகின்றது.

4.1 கமநல சேவைகள் நிலையங்களின் மேற்பார்வை



4.1.1 கிடைக்கப் பெற்ற கமநல சேவைகள் நிலையங்களின் பரிசீலனை அறிக்கைகள்.

கமநல சேவைகள் நிலையங்களின் மேற்பார்வைக்குரிய பரிசீலனை அறிக்கைகள் உரிய முறையில் பிரதான காரியாலத்திற்கு அனுப்பி வைக்கும் படி மாவட்டத்திற்குப் பொறுப்பான சகல பிரதி/உதவி ஆணையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ் வருடத்தில் 384 கமநல சேவைகள் நிலையங்களின் பரிசீலனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.1.2 கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக சேவைகள் வழங்கல்

விவசாயிகளுக்குத் தேவையான விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள், கன்று வகைகள், விவசாய உபகரணங்கள் மற்றும் வேறு தேவையான விவசாய பொருட்கள் கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக விநியோகம் செய்தல் மற்றும் அதன் மூலம் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.2 பொது பற்றுச்சீட்டு /ஏக்கர் வரி /பற்றுச்சீட்டுப் புத்தகம் மற்றும் காசுப்புத்தகம் விநியோகம்

கட்டளையிடப்பட்ட புத்தகங்கள் களஞ்சியத்தில் இருப்புக்கள் முடிவடைவதற்கு முன்னர் மீள அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் தேவைகளின் பிரகாரம் மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகம் செய்தல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய 2017ம் வருடம் பற்றுச்சீட்டுப்புத்தகங்களின் விற்பனை தொடர்பான தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

புத்தக வகைகள்	புத்தகங்களின் எண்ணிக்கை	ரூபா
பொது பற்றுச்சீட்டுப் புத்தகம்	8473	423,650.00
ஏக்கர் வரி பற்றுச் சீட்டுப் புத்தகம்	9070	453,500.00
குழுப் பணக் பற்றுச்சீட்டுப் புத்தகம்	85	110,500.00
மொத்தம்	**17628**	**987,650.00**

4.3 உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம்

உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டம் 2016 - 2018 மூன்று வருட திட்டத்தின் கீழ் நாடு பூராகவும் கிராமங்களில் 25000 “ සිත්මු ” மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களை அமைக்கப்பட்டதுடன், அவற்றில் 23,702 அளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவரையில் பெண் பயனாளிகள் 583,095 பேர் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை வேலைத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள்ளனர். அத்துடன் பழக்கிராமம் வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கும் நிறுவனத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களின் பயனாளிக்கு இதுவரையில் பழக்கன்றுகள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 11)**



4.4 உணவு உற்பத்திப் புரட்சி 2017-2020



கடந்த பல போகங்களின் போது (2016-2017) நிலவிய வெள்ளம் மற்றும் வரட்சி காரணமாக நாட்டின உணவு உற்பத்திச் செயற்பாட்டிற்கு ஏற்பட்ட தாக்கங்களை தவிர்த்துக் கொண்டு 2017/2018 பெரும் போகத்தில் உணவு உற்பத்தியில் புதிய புத்துணர்ச்சியை ஏற்படுத்தி, உணவு உற்பத்தியை அதிகரிக்கும் செயற்பாட்டை மீள ஆரம்பிக்கும் தேவைப்பாடு எழுந்துள்ளது. அதற்கமைய அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் "தேசிய உணவு உற்பத்திப் புரட்சி" பிரகடனப்படுத்தப்பட்டு விவசாயத் துறை மற்றும் அதனுடன் தொடர்புடைய சகல அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், கமக்காரர் சமூகம் போன்று தனியார் பிரிவுகளின் பங்களிப்புடன் துரித வேலைத்திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு அறிவுரை வழங்கப்பட்டது. அதன் ஆரம்ப வாரமாக 2017 ஒக்டோபர் மாதம் 06 ஆந் திகதி தொடக்கம் 12 ஆந் திகதி வரையிலான காலம் பெயர் படுத்தப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்திற்கு அணுசரணையாக நாடு பூராகவும் உள்ள தரிசாகவுள்ள 130,000 ஏக்கர் வயற்காணிகளை மீளப்பயிர்ச்செய்கை பண்ணுவதற்கு அரசினால் தீர்மானிக்கப்பட்டதுடன், தரிசான 15,058 ஏக்கர் வயற்காணிகள் அளவில் பயிரிடப்பட்டது.

இவ்வாரத்திற்கு இணையாக 5 இலட்சம் ஐதஅ மகளிர் வீட்டுத்தோட்டங்கள் தாபித்தல், விவசாய அமைச்சின் கீழ் உள்ள சகல நிறுவனங்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் இல்லங்களில் வீட்டுத்தோட்டங்களை தாபித்தல், சிறிய நீர்ப்பாசனங்கள், விவசாய வீதிகள் மற்றும் பயிர்ச்செய்கை கிணறுகளை புனரமைப்புச் செய்தல், தெரிவு செய்யப்பட்ட 100 பாடசாலைகளில் வீட்டுத்தோட்டங்களைத் தாபித்தல், பங்களிப்பின் கீழ் விதை நெல், சோளம் விதைகளை விவசாயிகளுக்கு வழங்குதல், சமய வழிபாட்டுத் தளங்களின் பொருட்டு தென்னங்கன்றுகளை விநியோகித்தல் போன்ற வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது. இதன் பொருட்டு ரூபா 5,029,847.50 அளவிலான பணம் செலவிடப்பட்டது.

தரிசான வயற்காணிகளை மீளப்பயிர்ச்செய்கை பண்ணும் வேலைத்திட்டம் - 2017

தொ.இல.	மாவட்டம்	மொத்த தரிசு வயற்காணிகளின் ஏக்கர் அளவு	வயற்காணித் துண்டங்களின் எண்ணிக்கை	பயிரிடப்பட்டுள்ள மொத்த தரிசு வயற்காணிகளின் ஏக்கர் அளவு
1	கொழும்பு	6454	5825	491
2	கம்பஹா	8366	11333	2332.25
3	களுத்துறை	16280	17689	2092
4	காலி	12767	13621	1814.3
5	மாத்தறை	11966	6309	817.8
6	அம்பாந்தோட்டை	1311	170	5.5
7	பதுளை	1574	1898	218
8	மொணறாகலை	183	0	0
9	இரத்தினபுரி	11147	11333	1568
10	கேகாலை	7132	10737	2210.55
11	குருநாகலை	3309	2909	353
12	புத்தளம்	4669	1810	349
13	கண்டி	11297	7218	960
14	மாத்தளை	861	1733	244.7
15	நுவரெலியா	895	1484	176.5
16	அனுராதபுரம்	0	0	0
17	பொலொன்னறுவை	0	0	0
18	திருகோணமலை	3157	0	0
19	வவுனியா	5323	0	0
20	முல்லைத்தீவு	5615	2029	1425.5
21	கிளிநொச்சி	4589	0	0
22	மன்னார்	4564	0	0
23	அம்பாறை	968	0	0
24	மட்டக்களப்பு	3941	0	0
25	யாழ்ப்பாணம்	4496	0	0
	மொத்தம்	**130864**	**96098**	**15058.1**

4.5 ஏக்கர் வரி அறவீடு

கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு 2017 ம் வருடத்தில் ஏக்கர் வரியின் 20% பங்களிப்புப் பணமாக ரூபா 28,872,876/- கிடைக்கப் பெற்றுள்ளது.

4.6 2KR – ஜப்பான் யென் உதவியின் கீழ் உழவு இயந்திரங்களை விநியோகித்தல் மற்றும் முகாமைத்துவம்



4.6.1 உழவு இயந்திரங்களின் தவணைப் பண அறவீடு

2KR - ஜப்பான யென் நன்கொடை வேலைத்திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சின் ஊடாக கிடைக்கப் பெற்று, இத் திணைக்களத்தினால் 2012 ஆம் வருடம் வரை விநியோகிக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் /விவசாய உதிரிப்பாகங்களின் பொருட்டு 2017 ஆம் ஆண்டினுள், அறவிடப்பட்ட தவணைப் பணம் மாவட்டங்களினால் பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த தவணைப் பணம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ளது.

அதற்கமைய கீழ் காட்டப்பட்டுள்ளவாறு தவணைப் பணம் கமநல அபிவிருத்தி நிதியத்திற்கு வைப்பிலிடப்பட்டுள்ளது.

➢ **02 சில்லு உழவு இயந்திரத்தின் தவணைப்பணம்**		**(ரூபா)**
• 1992-2006 வருடத்தினுள் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு	-	484,521.75
• 2008 ம் வருடத்தில் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உழவு இயந்திரங்களின் பொருட்டு	-	2,540,472.00
• 2010 ம் வருடத்தில் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களின் பொருட்டு	-	6,515,905.00
• 2012 ம் வருடத்தில் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களின் பொருட்டு	-	10,064,170.00
மொத்தம்		**19,605,068.75**

➢ **04 சில்லு உழவு இயந்திரத்தின் தவணைப்பணம்**		**(ரூபா)**
• 1986-2012 வரையில் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளஉழவு இயந்திரங்களின் பொருட்டு	-	534,700.00

➢ **நீர் பம்பி தவணைப்பணம்**	**(ரூபா)**

- 2010 வருடத்தில் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நீர் பம்பிகளின் பொருட்டு - 316,085.00

4.6.2 பாவனைக்குதவாத உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்களை அகற்றல்

2017 வருடத்தில் பாவனைக்குதவாத உழவு இயந்திரங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்டம்	04 சில்லு உழவு இயந்திரங்கள்	02 சில்லு உழவு இயந்திரங்கள்	இழுவைப் பெட்டி	ஏனையவை
கம்பஹா	26	01	23	91
களுத்துறை	03	02	04	03
மொத்தம்	**29**	**03**	**27**	**94**

4.7 வருடாந்த கணக்கறிக்கை

2016 ஆம் வருடத்தின் 520 வருடாந்த கணக்கு அறிக்கைகள் 2017.12.31 வரையில் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், மிகுதியான சகல கணக்கறிக்கைகளையும் பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட மட்டத்தில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கணக்கியல் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு முறையான பயிற்சிகள் கிடைக்கப் பெறாமை மற்றும் குழு எழுதுனரின் பற்றாக்குறைக் காரணமாக கடந்த வருடத்தில் கணக்கு அறிக்கைகளை தயாரிப்பதற்குத் தாமதமடைந்துள்ளதுடன், கணக்குப் பயிற்சியினை வழங்கியதன் பின்னர், இதுவரையில் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதற்கமைய இதுவரையில் 526 கமநல சேவைகள் நிலையங்களில் தயாரித்து முடிவுக்கப்பட்டுள்ளது. முறையான பயிற்சியை வழங்கி, உத்தியோகத்தர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டதனால் 2018 ஆம் வருடத்திற்குரிய கணக்கறிக்கைகள் உரிய காலத்தினுள் தயாரித்து முடிவுறுத்தும் பொருட்டு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

4.7.1 2006 வருடம் தொடக்கம் 2017.12.31 ஆந் திகதி வரையில் கிடைக்கப் பெற்ற கணக்கறிக்கைகள் தொடர்பான முன்னேற்றம்

தொ. இல.	மாவட்டம்	2017 வருடத்திலிருந்த கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை	வருடங்கள்											
			2006	2007	2008	2009	2010	2011	2012	2013	2014	2015	2016	2017
1	கொழும்பு	9	7	7	8	8	8	9	9	9	9	9	9	8
2	கம்பஹா	26	26	26	26	26	26	26	26	26	26	26	26	26
3	களுத்துறை	20	20	20	20	20	20	20	20	20	20	20	20	20
4	கண்டி	45	45	45	45	45	45	45	44	42	41	41	38	39
5	மாத்தளை	23	23	23	23	23	23	23	23	23	23	22	23	21
6	நுவரெலியா	22	22	22	22	22	22	22	22	22	22	22	22	22
7	காலி	33	33	33	33	33	33	33	32	33	31	31	30	28
8	மாத்தறை	22	22	22	22	22	22	22	21	21	21	22	22	22
9	அம்பாந்தோட்டை	17	16	16	16	16	16	16	16	17	17	17	17	17
10	யாழ்ப்பாணம்	15	13	15	15	15	15	15	15	15	15	15	15	15
11	கிளிநொச்சி	8	0	0	0	2	8	8	8	8	8	8	8	8
12	மன்னார்	12	4	4	3	5	10	10	12	12	12	12	12	12
13	வவுனியா	8	8	8	8	8	8	8	8	8	8	8	8	8
14	முல்லைத்தீவு	10	0	0	0	4	7	10	10	10	10	10	10	10
15	மட்டக்களப்பு	17	17	17	17	17	17	17	17	17	17	17	17	17

16	அம்பாறை	29	28	27	27	28	27	26	26	23	24	23	22	18
17	திருகோணமலை	22	22	22	22	22	22	22	22	22	22	22	22	22
18	குருநாகலை	56	55	55	55	55	54	55	55	55	56	56	55	56
19	புத்தளம்	18	18	18	18	18	18	18	18	18	18	18	18	18
20	அனுராதாபுரம்	42	35	38	40	40	40	41	41	41	40	40	38	41
21	பொலொன்னறுவை	12	9	9	11	11	11	11	11	11	11	12	12	11
22	பதுளை	31	31	31	31	31	31	31	31	31	31	31	31	27
23	மொனறாகலை	18	16	16	17	18	18	18	18	18	18	18	18	18
24	இரத்தினபுரி	30	30	30	30	30	30	30	30	30	30	30	30	29
25	கேகாலை	14	14	14	14	14	14	14	14	14	14	13	14	14
மொத்தம்		**559**	**514**	**518**	**523**	**533**	**545**	**550**	**549**	**546**	**544**	**543**	**537**	**526**
நிலையங்களின் எண்ணிக்கை (கணக்கறிக்கைகள் கிடைக்கப் பெற வேண்டிய)			**549**	**551**	**553**	**554**	**554**	**555**	**558**	**558**	**559**	**559**	**559**	**559**
நிலுவையாகவுள்ள கணக்கறிக்கைகளின் எண்ணிக்கை			**35**	**33**	**30**	**21**	**9**	**5**	**9**	**12**	**15**	**16**	**22**	**33**

அனுராதபுர மாவட்டத்தின் புலணேவ கமநல சேவைகள் நிலையம் மற்றும் பொலொன்னறுவை மாவட்டத்தின் அரலகங்வில கமநல சேவைகள் நிலையங்கள் தற்போது செயலற்ற நிலையில் உள்ளது.

05. போக்குவரத்துப் பிரிவு

2017 ஆம் ஆண்டு திணைக்களத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சகல அபிவிருத்தி வேலைகள், சட்டத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மற்றும் நிருவாகத்தினால் பொறுப்பளிக்கப்படும் சகல உத்தியோகபூர்வ போக்குவரத்து நடவடிக்கைகளின் பொருட்டு போக்குவரத்துப் பிரிவினால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டது. கடமைகளின் பொருட்டு இலகு வாகனங்கள் (ஜீப், வான் வண்டி, மோட்டார் கார்) உட்பட லொறி, டென்வீல், ப்பிரயிம் மூவர் வண்டி மற்றும் க்கிறேன் வண்டி உட்பட போக்குவரத்தில் ஈடுபடும் திணைக்களத்திற்குச் சொந்தமான 153 வாகனங்கள் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டதுடன், இவ் வாகனங்களில் 20 வருடங்களுக்கு கூடுதலாக பழமை வாய்ந்த வாகனங்களின் திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றி, இப்பணிகளைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதிகள் வழங்கியுள்ளது.

5.1. போக்குவரத்துப் பிரிவின் பிரதான பணிகள்

1. பிரதான காரியாலயத்தில் மற்றும் சகல மாவட்ட அலுவலகங்களில் உள்ள வாகனங்களின் திருத்தவேலைகள்.
2. வாகன விபத்தது தொடர்பாக நி.பி. இற்கமைய சட்ட நடவடிக்கைகள்.
3. நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேடுகளை பேணுதல்.
4. ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரித்தல்.
5. ஓட்டப் பதிவுக் குறிப்புப் புத்தகங்களின் பரிசோதனை மற்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல்.
6. கணக்காய்வு ஐயவினாவின் பொருட்டு பதில் வழங்குதல்.
7. வாகனக் காப்புறுதி.
8. இலவச வருமான வரி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
9. வருடாந்த செயற்படு திட்டத்தைத் தயாரித்தல்.
10. எரிபொருள் வழங்குதல், பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல்.
11. புதிய வாகனங்களைப் பெற்றுக் கொள்ளல்.
12. சாரதி/சாரதி உதவியாளர்களின் விடுமுறைகளைத் தயாரித்தல் மற்றும் மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவு பத்திரங்களை பரிசீலித்தல்.
13. உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களின் பொருட்டு மாதாந்த எரிபொருள் கட்டணங்கள் செலுத்துவதற்குரிய உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்தல்.
14. எரிபொருள் முற்பணம் கொடுப்பனவு மற்றும் அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றல்.

5.2. 2017 வருடத்தில் போகுவரத்துப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகள் சுருக்கமாக,

1. உத்தியோகத்தர்களின் போக்குவரத்து நடவடிக்கைகள் - கொழும்பு மாவட்டத்தினுள்ளும் மற்றும் நாடு முழுவதும் உத்தியோகத்தர்களின் பயணத்தின் பொருட்டு பொது வாகன வசதிகளை வழங்குதல்.
2. குள புனரமைப்பு நடவடிக்கைகளின் பொருட்டு அதிக பாரமுள்ள புல்டோசர் மற்றும் எக்ஸ்காவேற்றர் இயந்திரங்களை எடுத்துச் செல்லல்.
3. விவசாய உபகரணங்களை விநியோகம் செய்யும் பொருட்டு போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
4. புத்தரிசி விழாவின் பொருட்டு லொறி மற்றும் ஏனைய போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.

2017 வருடத்தினுள் செயற்படு திட்டத்திற்கமைய வருடத்தினுள் ஈட்டிக் கொள்வதற்குரிய இலக்கினை 90% அளவில் நிறைவேற்றிக் கொள்வதற்கு இயலுமாகவிருந்தது.

06. சட்டப்பிரிவு

இலங்கையின் கமத்தொழில் காணிகளில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொண்டு இலங்கை கமக்காரர்கள் சமூகத்தினரின் செழிப்பான அபிவிருத்தியின் பொருட்டு இட்டுச் செல்லும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் குறிக்கோளை உச்ச நிலைக்கு கொண்டு வருவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் சட்டப் பிரிவு அப் பணிகளுக்கு பங்களிப்புச் செய்கின்றது.

- இலங்கையின் கமத்தொழில் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு கமநல அபிவிருத்திச் சட்டம், அதற்குரிய ஒழுங்கு விதிகளைத் தயாரிப்பதற்குத் தேவையான தகவல்களை அமைச்சிற்கு வழங்குதல் மற்றும் ஒத்துழைப்பை வழங்குதல்.
- வாரப்பயிர்ச்செய்கையாளர்கள் மற்றும் சொந்தக் காணி உரிமையாளர்களிடையே ஏற்படும் கமத்தொழில் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கான சட்ட ரீதியான வழிகாட்டல்கள்.
- பயிர்ச்செய்கை உரிமைகளைப் பாதுகாத்தல்.
- கிராமிய நீர்ப்பாசனங்களை பாதுகாத்தல் மற்றும் பயிர்ச்செய்கை விதிமுறைகளை செயற்படுத்துவதற்கு சட்ட ரீதியான பாதுகாப்பை ஏற்படுத்துதல்.
- திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகளின் நிறுவனங்களின் பொருட்டான சட்ட ரீதியான அறிவுரைகள்.
- கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு நீதிமன்ற நடவடிக்கைகளில்
- ஈடுபடுதல்.

6.1 2011 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தினால திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டம்

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய சட்டத்திற்கு 2011 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதுடன், அச் சட்டம் 22.11.2011 ஆந் திகதி தொடக்கம் செயற்படுத்தப்பட்டதுடன், அதன் மூலம் வாரப்பயிர்ச்செய்கையாளர்களின் அடுத்துவருபவர் தொடர்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. 18.08.2000 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதிகளில் எழுத்து மூலமோ அல்லது வாய் மூல ஒப்பந்ததின் பேரில் வாரப்பயிர்ச்செய்கை உரிமையுள்ள ஒருவர் இறந்த போன சந்தர்ப்பத்தில் வாரப்பயிர்ச்செய்கை உரிமை உரித்துடையதாகுதல் வேண்டும் எனவும் வாரப்பயிர்ச்செய்கையாளர் முழுமையான பெலவீனமான ஒரு நிலைமைக்கு வந்ததும் வாரப்பயிர்ச்செய்கை பதிலீட்டை கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் 2011 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய (திருத்தச்) சட்டத்தை செயற்படுத்துவதற்குத் தேவையாகவுள்ள ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு தற்போது செயற்படுத்தப்படுவதுடன், தற்காலத்தில் மிகவும் முக்கியத்துவம் மிக்கதான கமத்தொழில் காணிகளை வினைத்திறமையான முறையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்துவதற்கான சட்டத்தின் 22, 23, 25 மற்றும் 26 ஆம் பிரிவுகளை செயற்படுத்துவதற்கான ஒழுங்கு விதிகளைத் தயாரித்து, தற்போது பயிரிச் செய்கையை மேற்கொள்ளாது தரிசாகவுள்ள அதிகளவிலான வயற்காணிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தப்படுகின்றது. அத்துடன் கமநல அபிவிருத்திச் சட்டத்தில் மிகுதி ஒழுங்கு விதிகள் மும்மொழியிலும் தயாரிக்கப்பட்டு தற்போது சட்ட வரைவாளரிடம் அனுப்புவதற்குத் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

6.2 விவசாயிகளின் பிணக்குகளைத் தீர்த்தல் (கமநல நியாயச் சபை/மீளாய்வுச்சபை)

2011 ஆம் ஆண்டு இலக்கம் 46 உடைய சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்திற்கமைய சொந்தக் காணிப் பயிர்ச்செய்கையாளர்களினால் வாரப்பயிர்ச் செய்கையாளர்களை நீக்குதல், வாரப்பயிர்ச்செய்கையாளர்களினால் சொந்தக் காணிக் காரர்களுக்கு குத்தகையை செலுத்தாது ஊதாசீனம் செய்தல் உட்பட கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் உள்ள 11 பிரிவுகள் தொடர்பாக கமநல நியாயச் சபை மூலம் விசாரணைகள் நடாத்துதல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கமநல நியாயச் சபைச் சபையின் தீர்மானத்திற்கு எதிராக மனுக்களை சமர்ப்பிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மீளாய்வுச் சபையை செயற்படுத்துவதன் பொருட்டுத் தேவையான ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு, கமநல நியாயச் சபைகள் மற்றும் மீளாய்வுச்சபை தற்போது செயற்பட்டு வருகின்றது.

6.2.1 கமநல நியாய சபையின் பொருட்டு கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள்

நியாய சபைக்கு கிடைக்கப் பெற்றுள் ளமுறைப்பாடுகளின் எண்ணிக்கை	விடுக்கப்பட்டுள்ள அழைப்புக் கடிதங்களின் எண்ணிக்கை	நடைபெற்றுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை	நடைபெற்று முடிவுற்றுள்ள விசாரணைகளின் எண்ணிக்கை	**2017. 12.31** திகதியில் மிகுதியாகவுள்ள விசாரணைகள
5532	3158	2656	1770	3762

6.2.2 2017.12.31 ஆந் திகதிக்கு மீளாய்வுச் சபையின் முன்னேற்றம்

மேன்முறையீட்டு கோவைகளின் எண்ணிக்கை	**விசாரணையின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோவைகளின் எண்ணிக்கை**	**கட்டளைகள் வழங்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை**	**விலக்கிக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ள வழக்குகள்**	**தொடர் நடவடிக்கைகளின் பொருட்டு உள்ள வழக்குகள்**
397	95	69	06	227

6.2.3 கமக்காரர்களின் முறைப்பாடு (பொது)

கமநல அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள்.

2017 ஆம் வருடத்தினுள் கிடைக்கப் பெற்றவை	**2016.12.31** ஆந் திகதிக்கு தீர்க்கப்படாத முறைப்பாடுகள்	**2017** வருடத்தினுள் தீர்வுகள்	2017.12.31 ஆந் திகதிக்கு மிகுதி
9150	10753	6095	13808

6.3 நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு முன்னிற்றல்

சட்டமாதிபரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- உயர் நீதிமன்றம் - **04**
- மேல் முறையீட்டு நீதிமன்றம் - **09**
- மாவட்ட நீதிமன்றம் - **10**
- மேல் நீதிமன்றம் - **30**
- நீதவான் நீதிமன்றம் - **47**

மொத்தம் - **100**

வயற்காணிகளை அனுமதியின்றி நிரப்புதல் தொடர்பாக மாவட்ட மட்டத்தில் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்தல் - 2017 ஆம் ஆண்டின் முன்னேற்றம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. அனுமதியின்றி நிரப்புதல்/நிர்மாணத்திற்கான தடை உத்தரவு பெற்றுக் கொண்ட எண்ணிக்கை (33 வது பிரிவு) - **144**
2. குற்றத்திற்கு தண்டனை வழங்குதல் மற்றும் பழைய நிலைக்கு உருவாக்குதல் (32 வது பந்தி) - **135**
3. முடிவுற்ற வழங்குகளின் எண்ணிக்கை - **28**

6.4 கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பான செயற்பாடுகள்

கமநல அபிவிருத்திச் சட்டத்தை செயற்படுத்தும் போது மேற்படி சட்டத்தின் 53 வது பிரிவிற்கமைய கமத்தொழில் காணி இடாப்புத் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை செயற்படுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் முக்கியமான விடயமாகும். நாட்டிலுள்ள சகல கமநல சேவைகள் நிலையங்களிலுமுள்ள கமத்தொழில் காணி இடாப்புக்கள் (மேட்டு/சேற்று) பொது மக்களின் பரிசீலனைக்காக ஒவ்வொரு வருடத்திலும் இரு தடவைகள் அதாவது ஜனவரி மற்றும் யூலை மாதங்களில் திறந்து வைப்பதாக பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படுகின்றது. இவ்வாறு திறந்து வைத்ததன் பின்னர் அது தொடர்பாக கிடைக்கப்பெறும் வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்து பார்த்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கமநல சேவைகள் நிர்வாகக் குழுக்களின் கடமையாகும். மேற்படி செயற்பாட்டின் முன்னேற்றம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

6.4.1 கமத்தொழில் காணி இடாப்புத் திருத்தம்:

2017 வருடத்தினுள் கிடைக்கப் பெற்றவை	முன்னைய வருடங்களின் மிகுதி	விசாரணை நடாத்தப்படவுள்ள மொத்த எண்ணிக்கை	விசாரணை முடிவுற்றவை	மிகுதியாவுள்ள எண்ணிக்கை
8524	8074	16598	3648	12950

6.5 சட்ட ஆலோசனை செயற்பாடுகள்

திணைக்கள உத்தியோகத்தர்களை எதிராளிகளாக குறிப்பிட்டு நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக சட்டமாதிபரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்திற்குத் தோன்றுதல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. சில காரணங்களின் நிமித்தம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மூலம் தயவை எதிர்பார்ப்பவர்களின் பொருட்டு தேவையான ஒத்துழைப்பு வழங்குதலும் அதன் பொருட்டு முன்நிற்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

நிருவாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றின் முன் தேவையான சந்தர்ப்பங்களில் தோன்றி காரணங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றது. அவற்றின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள்	03
மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள்	02
பாராளுமன்ற ஆலோசனை நிர்வாகக் குழுவிற்கு பதில் வழங்கல்	01
சிவில் வழக்கு தண்டக் கோவை (461 பிரிவு)	02
இலஞ்ச ஊழல் விசாரணைக் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள்	04

07. கணக்குப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவு பிரதான 04 பிரிவுகளைக் கொண்டுள்ளது. நிதிப் பிரிவு, கொடுப்பனவு மற்றும் சாரம்சப் பிரிவு, சம்பளம் மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவு மற்றும் மற்றும் பெறுகை நடவடிக்கைப் பிரிவு என்னும் நான்கு பிரிவுகளாகும். நிதிப் பிரிவினால் வருடாந்த வரவுசெலவுப் பதிவேடுகளைத் தயாரித்தல், கட்டுநிதித் தேவைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல், திறைசேரியுடன் உரிய இணைப்பு செயற்பாடுகளை ஏற்படுத்தி நிறைவேற்றல் மற்றும் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரிப்பதற்குரிய கடமைகளை நிறைவேற்றுகின்றது. கொடுப்பனவு மற்றும் சாராம்சப் பிரிவு திணைக்களத்தின் சகல கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், 25 மாவட்ட அலுவலகங்களின் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல், மாதாந்தக் கணக்குப் பொழிப்புக்களை ஒன்றிணைத்து திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் பொது வைப்புக் கணக்குகளின் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. சம்பளம் மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவினால் பிரதான காரியாலயத்தின் சம்பளம் மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் உரிய சம்பளம் மற்றும் முற்பணக் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. பெறுகைப் பிரிவு பிரதான காரியாலயத்தின் பெறுகை மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் உரிய பெறுகை மற்றும் களஞ்சிய நடவடிக்கைகளை நிருவகித்தல் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றது.

7.1 கடமைப் பொறுப்புக்கள்

1. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரம் கிடைக்கப் பெற்ற செலவுகளை முகாமைப்படுத்தலின் பொருட்டு நிதிப் பிரமாணம், சட்டங்கள், சுற்றுநிருபங்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு நாளாந்த, மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு அறிக்கைகளை உரிய விதத்தில் பேணுதல்.
2. வருடாந்த வரவு செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
3. சொத்துக்களின் முகாமைத்துவம்.
4. திணைக்களத்தின் பிரதான காரியாலயம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் சம்பளக் கடன் முற்பணம், பொது வைப்புக்கள் உட்பட செலவு, மூலதன மற்றும் மீட்டெழும் கொடுப்பனவுகளின் நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் செலவுகளை முகாமைப்படுத்தல்.
5. திணைக்களத்தில் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் பெறுகைக் குழுக்களை நியமித்தல் மற்றும் பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
6. அரச உத்தியோகத்தர்களின் முற்பண "B" கணக்கில் கடன் கொடுப்பனவுகள் அவற்றை உரிய முறையில் அறவிடல் மற்றும் உரிய அறிக்கைகள் மற்றும் கணக்குகளைப் பேணுதல்.
7. திணைக்களத்தின் மாதாந்த மற்றும் வருடாந்த கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் உரிய நேரத்திற்கு உரிய நிறுவனங்களுகச் சமர்ப்பித்தல்.
8. திணைக்களம் தொடர்பாக பொதுக் கணக்குக் குழுவிற்குச் சமர்ப்பிப்தற்குத் தேவையான தகவல்களைச் சமர்பித்தல் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளை நிறைவேற்றல்.
9. கமநல அபிவிருத்தி நிதியத்திற்குரிய வருடாந்த வரவுசெலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், வரவு மற்றும் செலவை முகாமைப்படுத்தல் மற்றும் இறுதிக் கணக்கறிக்கையைத் தயாரித்தல்.

10. கமநல அபிவிருத்தி ஆணையாளர நாயகத்தின் பெயரில் கிடைக்கப் பெறும் சகல கணக்காய்வு ஐயவினாக்களின் பொருட்டு பதில் வழங்குதல்.

7.2 வருடத்தின் செயலாற்றுத் திறன்

இவ் வருடத்தில் இயக்க மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டம் ஆகிய இரு வேலைத்திட்டங்களின் பொருட்டு திணைக்களத்திற்கு 8,623.85 மி.ரூபா மொத்த ஒதுக்கீடு பொது திறைசேரியினால் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ் ஒதுக்கீட்டில் 6,752.17 மி.ரூபா மீண்டெழும் செலவின் பொருட்டு என்பதுடன், 1,881.68 மி.ரூபா மூலதனக் கருத்திட்டங்களின் பொருட்டாகும். மீண்டெழும் மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் வருடத்தினுள் பயன்படுத்தப்பட்ட முறை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

விபரம்	தேறிய ஒதுக்கீடு	வருடாந்தச் செலவு	ஒதுக்கீட்டு மிகுதி	தேறிய ஒதுக்கீட்டு சமமாக வருடாந்த செலவின் % மாக
மீண்டெழும்	**6,752.17**	**6,676.10**	**244.30**	**96.47**
1-1 இயக்கச் செயற்பாடுகள்	**463.07**	**444.28**	**18.80**	**95.94**
தனிநபர் சம்பளம்	406.31	390.74	15.58	96.16
ஏனயவை	56.75	53.54	3.22	94.32
2-2 அபிவிருத்தி செயற்பாடுகள்	**6,289.10**	**6,254.58**	**24.52**	**99.60**
தனிநபர் சம்பளம்	6020.76	6,020.11	0.64	99.98
ஏனயவை	268.34	234.47	23.88	90.75
மூலதனம்	**1,881.69**	**914.22**	**967.45**	**48.58**
1-1 இயக்கச் செயற்பாடுகள்	**57.52**	**31.08**	**26.44**	**54.02**
கட்டடங்கள் புனரமைப்பு	35.58	20.40	15.17	57.35
வாகனப் புனரமைப்பு	17.94	7.12	10.81	39.70
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	2.00	1.80	0.20	90.12
பயிற்சி மற்றும் ஆற்றல் அபிவிருத்தி	2.00	1.76	0.25	87.94

2-2 அபிவிருத்திச் செயற்பாடுகள்	**1,824.17**	**837.95**	**986.26**	**45.93**
கட்டடங்கள் புனரமைப்பு	137.40	71.35	66.04	51.93
இயந்திரங்கள் புனரமைப்பு	7.00	6.57	0.43	93.82
வாகனப் புனரமைப்பு	5.00	3.65	1.34	73.07
தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	20.00	16.35	3.65	81.74
இயந்திரங்களின் சுவீகரிப்பு	2.00	1.28	0.73	63.75
கட்டட நிர்மாணம்	63.23	29.60	33.62	46.81
பசளைக் களஞ்சிய நிர்மாணம்	30.54	30.22	0.31	98.98
தரிசு நெற்காணிகள் பயிரிடல்	71.20	15.94	15.27	22.39
சிறிய நீர்ப்பாசன புனரமைப்பு	1,487.80	662.99	824.80	44.56

2017 வருடத்தில் மூலதன செலவின் பொருட்டு திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட 1,881.67 மி.ரூபாவிற்கு மேலதிகமாக விவசாய அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 4,600.90 மி.ரூபாவும், உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டின் கீழ் 314.51 மி.ரூபாவும், விவசாயத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 54.00 மி. ரூபாவும், ஜனாதிபதி செயலகத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 2.08 மி.ரூபாவும், இறக்குமதி விவசாயத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டின் கீழ் 1.69 மி.ரூபாவாக 4,971.1 மி.ரூபா கிடைக்கப் பெற்றதுடன், அதற்கமைய 2017 வருடத்தில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மூலதன ஒதுக்கீடாக 6,854.85 மி.ரூபா ஒதுக்கீடு, நாட்டின் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் நாட்டின் அபிவிருத்தி பொருட்டு உபயோகிக்கப்பட்டது.

2017 வருடத்தின் போது மூலதனச் செலவுத் தலைப்பு விடயங்களின் நிதி முன்னேற்றம் 48.58% ஆக இருந்தது. வருட இறுதியில் கொடுப்பனவு செய்யும் பொருட்டு போதுமானளவு கட்டுநிதி கிடைக்கப் பெறாமை இதற்கு காரணமாக அமைந்தது.

கணக்குப் பிரிவின் அலுவலக ஆளணியினரைச் சிறப்புடன் செயற்படச் செய்து ஒதுக்கீடுகளை மாவட்ட அலுவலகங்களுக்கிடையில் பகிர்ந்தளித்து, நாடு பூராகவும் உள்ள அலுவலகங்களின் நிதி முகாமைத்துவத்தினை சிறப்பாக நிறைவேற்றிக் கொள்ள இயன்றது இவ் ஆண்டில் நாம் ஈட்டிக் கொண்ட மாபெரும் வெற்றியாகும்.

7.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பண "B" கணக்கு 281011/281012

	செலவின் ஆகக் கூடிய எல்லை ரூபா	வரவுகளில் ஆகக் கூடிய எல்லை ரூபா	பற்று நிலுவைகளின் ஆகக் கூடிய எல்லை ரூபா
ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லை	285,000,000.00	225,000,000.00	600,000,000.00
வருடத்தின் உண்மையான பெறுமதி	284,190,210.67	234,464,982.41	407,066,034.93

2017 ஆம் வருடத்தினுள் விழா முற்பணமாக 110.17 மி.ரூபாவும், விசேட முற்பணமாக 36.4 மி.ரூபாவும், இடர் கடனாக 90.40 மி. ரூபாவும் வெள்ள அழிவின் பொருட்டு 47.22 மி.ரூபாவும் உத்தியோகத்தர்களிடையே வழங்கப்பட்டுள்ளது.

08. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அறிக்கையிட்டு பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் 32 உத்தியோகத்தர்கள் 2017 ஆண்டில் சேவையில் ஈடுபட்டுள்ளனர். 19 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் கமநல சேவைகள் குழுக்கள், கமநல சேவைகள் நிலைய இறுதிக் கணக்குகள் மற்றும் கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டங்கள் உட்பட 195 உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

தொ.இல.	கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கணக்காய்வு செய்யப்படும் பிரிவுகள்	கணக்காய்வுத் திட்டத்திற்கமைய எண்ணிக்கை	மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை
1	பிரதான காரியாலயத்தின் நிறுவன நடவடிக்கைகள்	03	02
2	பெறுகை நடவடிக்கைகள்	04	0
3	கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகங்களின் நிருவாக நடவடிக்கைகள்	03	04
4	நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள் (கருத்திட்டங்கள்)	07	08
5	கமநல சேவைகள் நிலையங்களின் பணக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்குகள	156	74
6	கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள்	72	28
7	கமநல அபிவிருத்தி நிதியத்தின் வரவு செலவு	01	-
8	விசேட பரிசோதனைகள்	சந்தர்ப்பத்திற்கேற்ப	10
9	கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டம்	04	03
10	நிலைய இறுதிக் கணக்குப் பரிசோதனை	08	65
11	வயற்காணிகளை வேறு செயற்பாடுகளின் பொருட்டு ஈடுபடுத்தல்	02	01
	மொத்தம்	**260**	**195**

8.1 மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுகள் மற்றும் விசேட பரிசோதனைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

தொ.இல.	மாவட்டம்	மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை		மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனைகள்	மொத்தம்
		நிலையக் குழு	கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டம்		
1	கொழும்பு	03	02	01	**06**
2	கம்பஹா	06	01	01	**08**

3	களுத்துறை	04	02	0	**06**
4	காலி	01	0	0	**01**
5	மாத்தறை	04	02	0	**06**
6	அம்பாந்தோட்டை	02	0	01	**03**
7	இரத்தினபுரி	01	01	0	**02**
8	கேகாலை	0	02	0	**02**
9	குருநாகமல	12	05	04	**21**
10	புத்தளம்	01	02	01	**04**
11	கண்டி	05	0	01	**06**
12	நுவரெலியா	06	04	0	**10**
13	பதுளை	10	01	0	**11**
14	மொனறாகலை	05	02	0	**07**
15	அனுராதபுரம்	05	02	0	**07**
16	பொலொன்னறுவை	02	0	0	**02**
17	மாத்தளை	01	01	0	**02**
18	அம்பாறை	02	01	01	**04**
19	திருகோணமலை	04	0	0	**04**
20	பிரதான காரியாலயத்தின் நிறுவன நடவடிக்கைகள்	-	-	-	**02**
21	நிலைய இறுதிக் கணக்குகள்	-	-	-	**65**
22	வயற்காணிகளை வேறு செயற்பாடுகளின் பொருட்டு ஈடுபடுத்தல்	-	-	-	**01**
23	கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்	-	-	-	**03**
24	கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகம்	-	-	-	**04**
25	நிர்மாணம் மற்றும் திருத்தவேலை நடவடிக்கைகள்	-	-	-	**08**
	மொத்தம்	**74**	**28**	**10**	**195**

09. விளைவுப் பெருக்க மற்றும் விற்பனைப் பிரிவு

“ இலங்கை வாழ் கமக்காரர் சமூகத்தினர் மற்றும் சகல கமத்தொழில் காணிகளின் நிலைபேறான அபிவிருத்தி “ எனும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நோக்கை ஈட்டிக் கொள்ளும் பொருட்டு விளைவுப் பெருக்க மற்றும் விற்பனைப் பிரிவிற்கு விசேடமான கடமைப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையினுள் உள்ள கமத்தொழில் காணிகளிலிருந்து ஆகக் கூடிய உச்ச விளைவைப் ஈட்டிக் கொள்ளும் பொருட்டு 2017 ஆம் ஆண்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

9.1. 15/2012 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம்

2012 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 15/2012 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தின் பிரகாரம் தரிசான நெற்காணிகளில் குறுகிய கால பயிர்களை செய்கை பண்ணுவதற்கும் நன்னீர் மீன் வளர்ப்பினை அதிகளவில் பிரபலியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இதன் பொருட்டு மாவட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/உதவி ஆணையாளர்கள் இடைவிடாது ஊக்குவிக்கப்பட்டதுடன், மாவட்ட மட்டத்தில் விசேட விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டது.

9.2. 4/2009 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம்.

4/2009 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபத்தை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனான வயற்காணிப் பயிர்ச்செய்கையின் பொருட்டு அனுமதி வழங்குவதற்கும் கமத்தொழில் காணிகளில் விளைச்சளை அதிகரிக்கும் நோக்குடன் விவசாய வீதிகள் அமைக்கும் பொருட்டு விடுக்கப்பட்ட வேண்டுகோள்களின் பொருட்டு தேவையான அனுமதியினை துரிதமாக வழங்குவதற்கும் 2017 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

10. கமநல வங்கிப் பிரிவு

கமநல வங்கியின் நோக்கம்

" இலங்கை வாழ் கமக்காரர் சமூகத்தின் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் நிதி ரீதியான கலாச்சாரம் "

கமக்காரர் வங்கியின் பணி

"சுய சக்தியுடையதான அபிமானம் மிக்க கமக்காரர் சமூகத்தை கட்டியெழுப்புவதற்குத் தேவையான நிதி ரீதியான பலத்தை அச் சமூதாயத்தினுள் ஸ்தாபிப்பதற்காக கமக்காரர்களை ஒழுங்கமைத்தல், சக்தியையும் பலத்தையும் உண்டு பண்ணல், நிறுவக கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்".

10.1 *கமநல வங்கியின் நோக்கம்*

1. கிராமிய விவசாயிகளின் வறுமையை ஒழிப்பதற்கு அவர்களுக்குத் தேவையான மூலதனத்தை உருவாக்கிக் கொள்வதற்கு உதவும் நிறுவனமாகக் கடமையாற்றல்.

2. விவசாயிகளின் சேமிப்புப் பழக்கத்தை அதிகரிப்பதற்கும் அதனூடாக அவர்களின் முதலீட்டுச் சக்தியை அதிகரிப்பதற்கும் உதவுதல்.

3. தங்கி வாழும் மட்டத்திலான கமத்தொழிலை பொருளாதார மட்டத்திலான நிலைக்கு உருவாக்குவதற்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் நிதி ரீதியான வசதிகளை உருவாக்கிக் கொடுத்தல்.

4. விவசாயிகளை ஒரு ஒழுங்கமைப்பாக உருவாக்கி அவர்களின் நிதி மற்றும் பொருளாதார சக்தியை அதிகரிப்பதற்கு அவகாசத்தை (வாய்ப்பினை) உருவாக்குதல்.

5. விவசாயிகளை சமூதாய ரீதியாகச் சிறந்த பலம் வாய்ந்த சமூகமாக உருவாக்குவதற்குத் நிதி ரீதியான பலமிக்க ஒரு சூழலைக் கட்டியெழுப்புதல் மற்றும் அவர்களது நலன்புரி நடவடிக்கைகளின் பொருட்டு பங்களிப்பினை வழங்குதல்.

6. விவசாயிகளுக்குச் சொந்தமான பணத்தையும் மூலதனத்தையும் அம் மக்களிடையே சஞ்சரிப்பதற்கு அவகாசம் அளிப்பதன் மூலம் கமக்காரர்களின் பொருளாதாரத்தை விரிவடையச் செய்தல்.

7. கமக்காரர் அமைப்புக்களைப் பலப்படுத்திக் கமத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட சிறுகைத்தொழிலுக்குத் தேவையான நிதிப் பலத்தை வழங்குதல்.

8. பெரிய வெங்காயம், பயறு, சோயா போன்ற, தற்போது பாரியளவில் இறக்குமதி செய்யும் பயிர்களை பயிர்ச் செய்கை பண்ணுவதற்குத் தேவையான நிதி வசதிகளை வழங்குவதன் ஊடாக அப் பயிர்களை அதிகளவில் கிடைக்கச் செய்தல் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பலத்தை வழங்குதல்.

10.2 2017.12.31 ஆந் திகதி வரையில் மாவட்ட மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டங்களின் எண்ணிக்கை

தொ.இல.	மாவட்டம்	கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை	அமைக்கப்பட்டுள்ள கமநல வங்கிகளின் எண்ணிக்கை
01	கொழும்பு	9	9
02	கம்பஹா	26	26
03	களுத்துறை	20	19
04	கண்டி	45	45
05	மாத்தளை	23	23
06	நுவரஎலிய	22	22
07	காலி	33	33
08	மாத்தறை	22	22
09	அம்பாந்தோட்டை	17	17
10	குருநாகல்	56	56
11	புத்தளம்	18	18
12	அனுராதபுரம்	43	42
13	பொலொன்நறுவை	13	12
14	பதுளை	31	31
15	மொனறாகலை	18	18
16	இரத்தினபுரி	30	30
17	கேகாலை	14	14
18	அம்பாறை	29	29
19	திருகோணமலை	22	18
20	மட்டக்களப்பு	17	16
21	வவுனியா	8	8
22	யாழ்ப்பாணம்	15	15
23	மன்னார்	12	12
24	முல்லைத்தீவு	10	10
25	கிளிநொச்சி	8	6
மொத்தம்		**561**	**551**

அனுராதபுர மாவட்டத்தின் புலணேவ கமநல சேவைகள் நிலையம் மற்றும் பொலொன்னறுவை மாவட்டத்தின் அரலகங்வில கமநல சேவைகள் நிலையங்கள் தற்போது செயலற்ற நிலையில் உள்ளது.

10.3 2017.12.31 ஆந் திகதி வரையில் கமநல வங்கி முன்னோடிக் கருத்திட்டத்தின் தொடர்பு கொண்டுள்ள கமக்காரர்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் வருடத்துடன் ஒத்துப்பார்க்கும் போது அதிகரிப்புக்கள்

	2017.13.31 ஆந் திகதி வரையில்	2016.12.31 ஆந் திகதி வரையில்	அதிகரிப்பின் சதவீதம் %
பங்குதாரர்களின் எண்ணிக்கை	859,394	772,496	11.24 %
வைப்பாளர்களின் எண்ணிக்கை	725,007	610,380	18.77 %
குழுக் கணக்குகளின் எண்ணிக்கை	55,877	46,956	19 %

10.4 2017.12.31 ஆந் திகதியில் கமநல வங்கி (முன்னோடிக்) கருத்திட்டத்தின் நிதி தொடர்பான தகவல்கள்

விபரம்	2016.12.31 திகதி வரையில் (ரூபா)	2017.12.31 திகதி வரையில் (ரூபா)
வருடாந்த தேறிய வட்டி வருமானம்	90,170,167.00	80,754,516.00
சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புக் கணக்கில் மிகுதி	645,699,015.00	756,424,902.00
நடைமுறைக் கணக்கில் மிகுதி	27,465,512.00	58,723,861.00
கடனாளிகள்	1,339,574,934.00	1,428,462,224.00
கமக்காரர்களின் பங்குப் பணக் கட்டுப்பாட்டுக் கணக்கு	387,863,871.00	450,585,389.00
மூலதனக் கணக்கு	194,204,346.00	194,794,298.00
கமக்காரர்களின் சேமிப்பு கட்டுப்பாட்டுக் கணக்கு	598,546,000.00	706,295,230.00
கமக்காரர்களின் குழுக்களின் கட்டுப்பாட்டுக் கணக்கு	132,662,235.00	157,165,303.00

10.5 கமநல வங்கிகளுக்கு மூலதனப் பணத்தை வழங்குதல்..

2017 வருடத்தினுள் கமக்காரர் பொறுப்பு நிதியத்தினால் கமநல வங்கிகளுக்கு மூலதனப்பணத்தை வழங்கும் பொருட்டு ரூபா 20,000,000/- பணம் கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், அப்பணத்தில் ரூபா 23,250,000/- பணம் கமநல வங்கிகளுக்கு மூலதனமாக வழங்கப்பட்டுள்ளது. முன்யை

வருடங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள காலம் கடந்த ரூபா 48,800,000/- பணம் மீளவும் மீள கமக்காரர்களின் பொறுப்பு நிதிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

10.6 கமநல வங்கியின் மூலம் கடன் வழங்குதல் மற்றும் அறவிடல்

கமநல வங்கி மூலம் ஆரம்பம் தொடக்கம் 2017.12.31 ஆந் திகதி வரையில் வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன்களின் பெறுமதி ரூபா 9,609,788,581/- என்பதுடன், மொத்தக் கடன் அறவீடுகளின் பெறுமதி ரூபா 8,166,729,039/- ஆகும். அதற்கமைய அறவிடப்பட வேண்டியுள்ள பணம் ரூபா 1,443,059,541/- ஆகும். இதில் ரூபா 1,120,653,120/- காலங்கடக்காத கடன் பணம் என்பதுடன், ரூபா 322,406,421/- காலங்கடந்த கடனாகும்.

இதற்கமைய, மொத்தக் கடன் பெறுமதியில் காலங்கடந்த கடன் தொகையின் நூற்றுவீதம் 3.35 %வீதம் மட்டுமேயாகும். 2017 ம் வருடத்தில் கமநல வங்கி மூலம் கமத்தொழில் கடன்கள் ரூபா 525,063,582/- ம், கருத்திட்டக் கடன்கன் ரூபா 570,958,917/- ம், ஏனைய கடன்களாக ரூபா 30,085,872/-வும் என ரூபா 1,126,108,371/- கடன் பணம் கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது,

.

11. நீர் முகாமைத்துவப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவு 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதுடன், தற்போது இப்பிரிவு நீர் முகாமைத்துவம் தொடர்பான பொறியியலாளர் ஒருவரின் தலைமையில் செயற்படுகின்றது

தற்போதுள்ள மனித வளங்கள்	நீர் முகாமைத்துவப் பிரிவு	ரீமூட் சென்சிங் பிரிவு
• பொறியிலாளர்	01	-
• பொறியியல் உதவியாளர்	01	01
• தொழில்நுட்ப உத்தியோகத்தர்	-	01
• அபிவிருத்தி உத்தியோகத்தர்	-	03
• பொது முகாமைத்துவ உதவியாளர்	02	-
• குழு எழுதுனர்	01	
• விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்	-	01
• அலுவலப் பணியாளர்	01	
• காவலாளி	01	

11.1 நீர் முகாமைத்துவ பிரிவின் பணிகள்

2000 ஆம் ஆண்டு 46 ஆம் இலக்கமுடைய கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 7 வது பாகத்தின் "சிறிய நீர்ப்பாசன வேலையும் நீர்ப்பாசன நீரின் முகாமைத்துவம்" என்னும் தலைப்பில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் போன்று 22.12.2014 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 1899/3 என்னும் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானியில், இலங்கையின் நீர் மூலங்கள் தொடர்பான தேசிய கொள்கையை, திணைக்கள மட்டத்தில் செயற்படுத்தும் பொருட்டு இலங்கையிலுள்ள சகல சிறிய (கிராமிய) நீர்ப்பாசனங்களினதும் விளைவுப் பெருக்கத்தை மேலோங்கச் செய்தல் மற்றும் அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்வதன் ஊடாக அதனது பாதுகாப்பினை உறுதி செய்வதற்குத் தேவையான வேலைத்திட்டங்களை தயாரித்து செயற்படுத்தல் நீர் முகாமைத்துவப் பிரிவின் பணிகளாகும். அதற்கமைய 2017 ஆம் ஆண்டு இப்பிரிவினால் நிறைவேற்றப்பட்டுள்ள பொறுப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளது

11.2 தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள்

கட்டடங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களின் நிர்மாணங்களின் தரக்கட்டுப்பாடு மற்றும் அத்திவாரம் நிர்மாண அறிக்கைகளை வழங்குதல்.

11.3. புதிய தரக்கட்டுப்பாடு ஆய்வுகூடங்களைத் தாபித்தல்

மாவட்ட மட்டத்தில் கட்டடங்கள் சிறிய நீர்ப்பாசன நிர்மாணங்களின் தரவுக்கட்டுப்பாடு அறிக்கைகளை வழங்கும் பொருட்டு 2017 ம் வருடத்தில் 03 புதிய தரக்கட்பாடு ஆய்வு கூடங்கள் அனுராதபுரம், புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தாபிக்கப்பட்டது.

11.4 நீரின் தரத்தன்மையைப் பரிசோதித்தல்

நீர்ப்பாசன நீரின் தரத்தன்மையைப் பரிசோதிக்கும் பொருட்டு 80 Ec/pH மீற்றர் மற்றும் உதிரிப்பாகங்கள் தொகுதிகள் கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்குதல்.

11.5 பொத்துஹெர பயிற்சி நிலையத்தை மேம்படுத்தல்

